# விடியல்

*மாத இதழ், பொழுது – 18*
**ஆடி – ஆவணி**
**ஆகஸ்ட் – 2010**
vidiyalmagazhine.blogspot.com
vidiyalmagazhine@gmail.com



*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**திரு. ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்


## உள்ளடக்கம்


o *வாழ்த்துகள்*
 *தனிச்சிறப்பான நடத்துநர்* 02
o *நன்றிகள்*
 *கருத்து மடல்கள்* 02
o *தொடர்கட்டுரை*
 *சிதையாநெஞ்சுகொள்* 03
o *கவிதைகள்*
 *தமிழா உணர்வுகொள்* 05
 *கல்வி* 05
 *செம்மொழி* 07
o *கட்டுரைகள்*
 *மனக்குழப்பம்* 06
 *பெண்பால்* 07
 *நீர்மாசுபாடு* 11
o *விதைகளும் விருட்சங்களும்* (பகுதி - 4)
 *கவிஞர் எழிலரசியின் கவிதைகள்* 09
o *தமிழறிஞர் அறிமுகம்* (பகுதி - 3)
 *கவிமணி* 13
o *நாட்டுப்புறவியல் கருத்தரங்கு* 15
o *குறுங்கட்டுரைகள்*
 *சார்லஸ் டிக்கன்ஸ்* 15
 *நேருவின் மேசையில்* 16
 *வணக்கம் - பொருள்* 17
 *எளிய மருத்துவம்* 17
 *கொண்டாடுவோம்* 19
o *அனுபவக் கட்டுரை* (பகுதி - 1)
 *எனது கல்லூரி* 18
o *தொடர் செய்யுள்* (பகுதி - 2)
 *கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ்* 20


***வெளியீடு:***


**தமிழ்த்துறை,**
**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
**திருச்செங்கோடு – 637 215, தமிழ்நாடு, இந்தியா.**
*www.ksrcasthamizh.blogspot.com, www.ksrcas.net.*

விடியலின் வாழ்த்துகள்

## தனிச்சிறப்பான நடத்துநர்

*ஈரோடு அண்ணா நகர் காளைமாடு சிலை பேருந்து நிறுத்தத்திலிருந்து சென்னிமலை செல்வதற்காகப் பேருந்தில் ஏறினேன். அதில் பயணச்சீட்டைக் கொடுத்துக் கொண்டிருந்த நடத்துநர் ஒவ்வொரு முறையும் அவரது இடது கையில் மணிக்கட்டு பகுதியில் கட்டியிருந்த கை கடிகாரத்தைத் தொட்டுத் தொட்டு பயணச்சீட்டைக் கிழித்துக் கொடுத்தார். என்ன என்று கவனித்தப் பிறகு வியந்து போனேன்.*

*பயன்படுத்த முடியாத பழைய கடிகாரத்தில் நேரம் காட்டும் பகுதியில் தண்ணீர் நிரம்பிய ஸ்பான்ச் இருந்தது. அதனை விரலால் தொட்டு பயணச் சீட்டைக் கிழித்துக் கொடுத்து வந்தார்.*

*நாக்கின் எச்சிலைத்தொட்டுச் சீட்டு கிழித்துக் கொடுக்கும் பல நடத்துநர்களிடையே இவரது செயல்பாடு சிறப்பாக இருக்கிறது. தொற்றுக் கிருமிகளால் பல நோய்கள் பரவ வாய்ப்பிருக்க, அதனைத் தடுக்கும் முன்னெச்சரிக்கையாகச் செயல்படும் இவரது சமூக அக்கறை மற்ற நடத்துநர்களுக்கும் பிற துறையில் உள்ளவர்களுக்கும் விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.*

*இவரைப் போல் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்தளவு சமூகப் பொறுப்புணர்ச்சியோடு செயல்பட்டால் நாடு நலம் பெறும்.*

**எம். கணபதி**
இளங்கலை இரண்டாமாண்டு
வணிகவியல் (கணினி) 'அ'பிரிவு

விடியலின் நன்றிகள்

## கருத்து மடல்கள்

*"'இளைஞர்களே! உங்கள் சூரிய விழியைத் திறந்து பாருங்கள். துயர இரவுகள் பறந்துவிடும். சாதனை வானம் உங்களைத் தரிசிக்கத் தனிமையில் தவமிருக்கிறது' என்று அறைகூவல் விடும் விடியலின் படைப்புகள் அனைத்தும் தரமானதாக உள்ளன.*

*'உலகப் பந்தைப் புரட்டிப் பார்க்கும் நெம்புகோல்,'இளைஞர்தான்' என்பதைக் கற்பகராஜ் தம் கட்டுரையில் வலியுறுத் தியுள்ளார்.*

*விண்முட்டும் கோபுரங்கள், வினை தீர்க்கும் ஆலயங்கள் தமிழ் நாட்டரசின் சின்னமாகும். இந்த ஆலயங்களின் பரிணாம வளர்ச்சியை மணிகண்டப்பிரபு சொல் லோவியமாக ஆக்கியுள்ளார். பேராசிரியர் பெருமாள் முருகனின் பேட்டியைச் சிறுகதைகளின் ஆய்வென்றே கூறலாம்.*

*விடுதலை வேள்வியில் தம்மை ஆகுதிகளாக்கிக் கொண்ட பீகார்காந்தி, இராஜேந்திரபிரசாத், மொரார்ஜிதேசாய் ஆகியோர் பற்றிய மாணவர்களின் கட்டுரைகள் சுதந்திர மேன்மையைக் காட்டும் முத்திரைகளாகும்.*

*சாதனை நாயகர், சரித்திர நாயகர், கல்வித்தந்தை கே.எஸ்.ஆர். அவர்களை நெஞ்சக் கருவறையில் மறுகர்ப்பம் தாங்கிய பேராசிரியர் யுவராசா, ஐயாவைக் காக்க வேண்டிக் கடவுளரை வேண்டும் கே.எஸ்.ஆர். பிள்ளைத்தமிழ் பகுதியைச் சிறப்பாக வெளியிட்டுள்ளனர்.*

*காதல் சிலருக்கு இனிக்கும். பலருக்கு வலிக்கும். பாதை மாறினால் வாழ்க்கைப்*

*பயணம் பயனற்றதாகும் என்ற உமாராணியின் கவிதை, இளைஞர்களின் படைப் பிலக்கியத்திற்கு ஒரு சான்றாகும். பூகம்பம் என்ற பிறமொழிச் சொல்லிற்கு 'நில அசைவு' என்பன போன்ற கலைச்சொல்லாக்கம் பாராட்டிற்குரியன.*

*கே.எஸ்.ஆர். கல்லூரியின் தமிழ்ப் பணிக்கு 'விடியல்' மேலும், மெருகூட்டுகிறது என்றால் அது மிகையாகாது. வளர்க! விடியலின் பணிகள்."*

***பேரா. மோ.ஆ. யுவராசா***
*தமிழ்ப் பேராசிரியர்,*
*கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி*

*"விடியல் மாத இதழைக் கண்ணுற்றேன். மிக்க மகிழ்ச்சியடைந்தேன். குமரிக்கண்டம் ஆய்வுக்கட்டுரைச் செய்திகளும் வரலாற்றுச் சான்றுகளும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.*

*கவிஞர் கோ. உமாராணியின் கருத்துருவாக்கக் கவிதையைப் படித்தேன். உள்ளத்தை உருக்கும் வார்த்தைகளால் செதுக்கி வடிவமைத்திருக்கின்றார். முடிவிற்கு முற்றுப்புள்ளி நோய் என்பதைக் கவிதையில் உயிரோட்டமாகப் படைத்திருப்பது பாராட்டுக் குரியது. தலைப்பில் 'அவலம்' என்று குறிப்பிடாமல் 'பெண்ணின் சோக(ம்) முடிவு' என்று குறிப்பிட்டிருந்தால் பொருத்தமாக அமையுமெனக் கருதுகின்றேன்.*

*கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழைப் பாடத்திட்டத்தில் சேர்க்குமாறு பரிந்துரை செய்கின்றேன்."*

**முனைவர் செ. திருஞானசம்பந்தம்,**
தமிழ் உதவிப்பேராசிரியர்,
பெரியார் ஈ.வெ.ரா. அரசு கலைக்கல்லூரி,
திருச்சி – 23.

தொடர் கட்டுரை

# சிதையா நெஞ்சு கொள்

**த. மணிகண்டன்**
இளங்கலை தமிழ் இரண்டாமாண்டு

***"மனதிலுறுதி வேண்டும்***
***வாக்கினிலே யினிமை வேண்டும்***
***நினைவு நல்லது வேண்டும்***
***நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்***
***கனவு மெய்ப்பட வேண்டும்"*** என்று மனிதனுடைய உயரிய மாண்புகள் எல்லாம் இவ்வையகத்து வானில் வலம்பெற வேண்டும் என எண்ணிய எண்ணங்களையெல்லாம் தம்முடைய கவி வன்மையில் காலத்தால் அழியாத பெட்டகமாய் வையத்து மக்களுக்கு மனதில் உறுதி வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஒரு மனிதன் பிறந்தான் - வாழ்ந்தான், இறந்தான் என்று இல்லாது இவ்வுலகத்திற்கு அவனால் என்ன பயன் என்பதனை ஒவ்வொருவரும் எண்ண வேண்டும்.

சிதைவுறாத மனதினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இதனைப் பெற்ற ஒவ்வொருவரும் வாழ்வினில் எவ்வாறு வளம்பெறுவது என்பது குறித்துச் சிந்தனைசெய்து, சாதனை களை அடைய சரித்திரங்கள் பல நிகழ்த்த வேண்டும்.

உலக மக்கள் போற்றுமாறு உயரிய பல தொண்டுகள் செய்திட நாளும் உழைத்திடுக.

*‘மனமெனும் ஓடையில் - நினைவெனும்*
*நீரை ஓடவிடு! வாழ்க்கையெனும்*
*கரடுமுரடான பாதை – உன்*
*வாழ்விற்கு வழி காட்டும்.’*

மனத்தில் நினைக்கக் கூடிய நினைவுகள் எல்லாம் நிஜங்கள் ஆகிவிடமுடியாது. நினைவுகளுக்கு உயிர் கொடுத்து தட்டியெழுப்பினால் மட்டுமே நினைவு நிஜமாகும். வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

அவ்வாழ்க்கை வளம்பெறுவதற்கு முயற்சியெனும் வேரை நிலைநாட்ட வெற்றியெனும் பூமகள் உன்னை விண்ணகத்தில் இருந்து காற்றின் அலைபட்டு உன்னிடத்தில் பூ மழையாக வருவாள். ஆகையால் வாழ்க்கை வெற்றிபெற வேண்டுமேயானால் முயற்சி செய்ய வேண்டும்.

அதற்கு நினைவுகளைக் காற்று போல பயணிக்க விடாமல் உங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்து மனத்தை ஒருமுகப்படுத்தினால் மட்டுமே வாழ்க் கையை வளமானதாக உருவாக்க முடியும். இல்லையெனில் அந்த வாழ்க்கை சிதைந்து விடும் என்பதைனை மட்டும் நினைவுகளில் இருக்கட்டும்.

*“காகிதத்தில் கப்பல் செய்து*
*கடல் நடுவே மிதக்க விட்டேன்*
*கடல் அலை போல் - மன*
*அலையும் அலைகிறது”.*

கடலலைப் போல் மனஅலையும் அலையும் எண்ணங்கள் பல திசைகளில் பயணிக்கும். வெற்றியெனும் பாதையை அடைய ஒரேதிசை வழிதான். அந்தப் பாதையை அடைய வேண்டுமேயானால் எண்ணமும் மனமும் அலைபோல் அலையாது பயணிக்க வேண்டும்.

மனிதன் ஆசைகளைத் துறந்து நம்பிக்கை என்னும் வேரை நிலைநாட்ட பல மனிதர்கள் ஆசைகளைத் துறந்து தனக்கென்று வாழாது பிறருடைய நலனில் அக்கரை கொண்டு தன்னைத் தானே செதுக்கிப் பிறரை இச் சமூகத்திற்குப் பெரும் பங்கு ஆற்ற வழி வகை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் வாழ்ந்து வருகின்றான். இவர்களெல்லாம் தங்களுக்குள் அலைந்து கொண்டிருக்கும் மனத்தை ஒரு முகப்படுத்த அலையாத மனமாக மாற்றி வாழ்ந்து கொண்டு வருவார்கள். அதுபோல நாமும் வாழ்வினில் வளம்பெற்று வாழ்வோம்.

*“வாழ்க்கை வாழ்வதற்கே!*
*வயதுள்ள வரை வாழ்வோம்*
*வானுலகத்தில் சாதனைகள்*
*பல புரிந்திடுவோம்*
*சரித்திரங்கள் நிகழ்திடுவோம்”*

என்ற உயர்ந்த எண்ணங்களை உறுதியான வாழ்வு கொண்டு உலகத் திற்குப் பறைசாற்றிட ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வு உறுதி என்ற பூட்டினைப் பூட்டி வாழ்க்கையெனும் வாசலுக்குச் சென்று வளம்பெற வாழ்வாங்கு வாழ வேண்டும். ஆகவே, ஒரு மனிதனின் வாழ்வு உறுதியாக அமைந்துவிட்டால் உலகத்தினை வெற்றி பெறலாம்.

வாழ்க்கையானது அவர்களுடைய கையில்தான் உள்ளது. ஆகவே, முயற்சி எனும் கோலைப் பிடித்து வெற்றியெனும் கரையை அடைய

வேண்டுமெனில் முயற்சி அவசியமானது. அம்முயற்சியினை முயன்று ஒவ்வொரு பணியிலும் ஈடுபடுத்தினால் அப்பணியில் வெற்றியெனும் பூ பூத்துக் குலுங்கும். வாழ்க்கை இனிமையுறும். ஆகவே, என் இனிய தமிழர்களே! முயற்சி செய்யுங்கள்! வெற்றி நிச்சயம். முயற்சி செய்ய வில்லையெனில் தோல்வி நிச்சயம். ஒவ்வொரு மனிதனின் பணியிலும் அவனுடைய முயற்சிக்குத் தகுந்த கூலி கிடைக்கும். அது பொருளாகவோ, புகழாகவோ (அ) எதுவேண்டுமானாலுமோ இருக்கலாம். ஆனால், முயற்சி அவசியம். முயற்சி செய்யுங்கள். வெற்றி வாகை உங்களுக்கே! பயணம் தொடரட்டும்.

சிதைவுறாத மனத்தைப் பெற்று மனம் மகிழ்ச்சிதனில் திளைத்து, எண்ணங்கள் உயர்வடைந்து, ஒருமித்தக் கருத்துடன் வாழ்ந்து, ஒற்றுமையுணர்வுடன் பழகி, ஓயாது தம் பணியைச் சீரும் சிறப்புடனும் செம்மைபட, செந்நெல் போன்று செழித்தும் செழுமையுடன் வாழ்க! வளர்க!.

▣

க வி தை

# கல்வி

**தினேஷ்**

இளங்கலை உயிரி தொழில்நுட்பவியல்
இரண்டாமாண்டு

*கலங்கரை விளக்காய் நின்று - இந்த*
*உலகிற்கே நீ ஒளி வீசு.....*
*அறியாமை கொண்ட மக்களிடையே - நீ*
*உன் அனுபவத்தை அள்ளிக் கொடு....*
*மழைத் துளிகளும் ஏங்குகின்றன - உன்னைக்*
*காண வகுப்பறைக்கு வர இயலாமல்.*
*நிலவும் கண்ணீர் வடிக்கின்றது - உன்னைக்*
*கற்க பகலில் வரமுடியாமல்.*
*இவற்றுடன் ஒப்பிடும் போது - நானோ*
*அதிஷ்டசாலி.*

▣

க வி தை

# தமிழா உணர்வுகொள்



*"ஆன்றோர் வழி நில்!*
*ஆற்றுக பொதுப்பணி!*
*இலக்கியம் புகுத்திடு!*
*ஈனரை ஒதுக்கிடு!*
*உயிர் தமிழாம் உணர்ந்திடு!*
*ஊழலை நொறுக்கிடு!*
*எட்டப்பர் இகழ்ந்திடு !*
*ஏறுபோல் வீறுகொள் !*
*ஐயம் களைந்து அறிவைப் பயிர்செய்!*
*ஒழுக்கம் போற்றிடு!*
*ஓம்புக பெரியோரை!*
*நாடு வாழ நலிவு தீர்த்திடு!*
*பகைவர்க்கு வளையேல்!*
*மாயைக்கு மயங்கேல்!*
*வாய்மையே போர்வாள்!*
*யானைபோல் பயன்படு!*
*"ழ" கரமாயச் சிறப்புறு!"*

**வ. சரவணக்குமார்,**
இளங்கலை கணினி பயன்பாட்டியல்
இரண்டாமாண்டு 'அ' பிரிவு

▣

கட்டுரை

# ❋ மனக்குழப்பம் ❋

**கோ. மணிகண்டபிரபு**
இளங்கலை கணினி அறிவியல்
மூன்றாமாண்டு 'ஆ' பிரிவு

மனம் என்றால் என்ன? மனது என்று ஒன்று இருக்கிறதா? மனது இருக்கிறது என்றால் எங்கே இருக்கிறது? அப்படி இருக்கும் பட்சத்தில் நாம் ஏன் அதனை இதயத்துடன் தொடர்புபடுத்துகிறோம். ஒரு வேளை மனது என்று இல்லை என்றால் பிறகு ஏன் நாம் அந்தச் சொல்லை அடிக்கடிப் பயன்படுத்துகின்றோம்? அப்படி ஒன்று நம் உடலினுள் இருப்பதாகவே எப்பொழுதும் நம்புகிறோமே அது ஏன்?

ஆதி மனிதன் தற்போது இருக்கும் நம்மவர்களைப் போன்ற உடற்கூறுகளைப் பற்றிய தெளிவான அறிவினைப் பெற்றிருக் கவில்லை. உடலியக்கம் எவ்வாறு நடைபெறுகிறது என்று ஆராய அவனுக்குத் தெரியவும் இல்லை - தோன்றவும் இல்லை. ஆனால், நாம் இப்போது உணருவதைப் போலவே ஆதிமனிதனும் இதயத் துடிப்பினை உணர்ந்தான். தன் உடலுக் குள் எப்போதும் ஏதோ அதிர்வு ஏற்பட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தான். நாட்கள் செல்லச் செல்ல அவனுடைய கவனிக்கும் திறனும், ஆராயும் திறனும் மேம்பட இந்த அதிர்வு உயிருடன் இருப்பவர்களின் உடலில் மட்டுமே ஏற்படுகிறது என்ற முடிவுக்கு வந்தான்.

அப்படியானால் அங்குதான் உயிர் இருக்க வேண்டும். அதனால்தான் உயிர் பிரிந்தவுடன் அதிர்வு நின்றுவிடுகிறது என்று நினைத்தான். மனிதநாகரிகம் வளர வளர இது தொடர்பான ஆய்வுகளும் வளர்ந்தன. நாம் பேசுவது, அழுவது உள்ளிட்ட நமது அனைத்துவிதமான உணர்வுகளும் நம் நெஞ்சுப் பகுதியில்தான் இருக்கின்றன எனவும் அங்கிருந்துதான் அனைத்து செயல் களும் வெளிப்படுகின்றன எனவும் அவர்களும் அவர்களுக்குப் பின்னால் வந்தவர்களும் நம்பினர். இவ்வாறாக அவர்கள் தங்களின் உணர்வுகள் அனைத்தும் தங்கியிருக்க ஓர் இடம் உடலுக்குள் இருப்பதாகக் கருதி னார்கள்.



இவ்வாறாக உருவாக்கப்பட்டதுதான் மனது. அதை ஏன் இதயத்துடன் தொடர்புபடுத்தினார்கள் என்றால் இதயம் மட்டுமே தன் இருப்பை எப்போதும் தெரியப்படுத்திக் கொண்டிருந்தது. பிற் காலத்தில் உடற்கூறுகளைப் பற்றி அறிவு வளர்ச்சி அடைந்தாலும் இதயம் என்பது இரத்தத்தை உடல்முழுவதும் பாயச்செய்யும் ஒரு உறுப்புதான் என்பது தெரியவந்தாலும் மனதுக்கும் இதயத்துக் குமான தொடர்பை யாரும் அறிய முயலவில்லை. அவ்வாறு அறியப்பட்ட உண்மைகளையும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

தற்போதுள்ள அறிவால் சிறந்த மனிதனும் இதையேதான் செய்கிறான். உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் மனிதன் மனது என்ற ஒன்று இருக்கிறது என்றே கூறிவந்தான். ஆனால், உண்மையில் மனது என்று எதுவும் இல்லை. நாம் பேசுவது, அழுவது, சிந்திப்பது, நினைவில் வைத்துக் கொள்வது எல்லாமே மூளையின் துணையால்தான். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் மூளைதான் காரணம். வேறுமாதிரியாகச் சொன்னால் நமக்கு எண்ணங்கள், சிந்தனைகள் எங்கே தோன்றுகின்றனவோ அதுதான் மனது. அவரவர் விருப்பப்படி மனத்தை எங்கே வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். என்ன, மனத்தைப் பற்றிய உங்கள் “மனக்குழப்பம்” தீர்ந்ததா?

◙

**க வி தை**

# ❊ செம்மொழி ❊


**பாண்டியராஜ்**
இளங்கலை உயிரி தொழில்நுட்பவியல்
இரண்டாமாண்டு


***நாவில் உறவாடி, நன்குற பழகி,***
***தெவிட்டாத வார்த்தைகளைச் சுமந்து,***
***உலக வீதிகளில் உலா வந்து,***
***நாளும் நமது நெஞ்சில் நன்கு***
***சிம்மாசனம் அமைத்து.***
***அலைகளைப் போல்***
***ஓரிடத்தில் நில்லாது,***
***உடலில் ஓடும் குருதி போல்***
***மீண்டும் மீண்டும் சுழன்று***
***நிலையில்லாத நிலையைப்***
***பெற்றுள்ளது நம் செம்மொழியாம்***
***தமிழ்மொழி.***

◙

**க ட் டு ரை**

# ❊ பெண்பால் ❊


**சே. கற்பகராஜ்**
இளங்கலை வணிகவியல் (கணினி)
இரண்டாமாண்டு ‘ஆ’ பிரிவு


> *“யோகக்காரர்களுக்குத்தான்*
> *முதல் குழந்தை*
> *பெண்ணாய்ப் பிறக்கும்”*
> **- போர்ச்சுகல் பழமொழி**

ஒவ்வொரு சரித்திரத்தின் பின்னாலும் பெண் இருப்பது உண்மையே. இந்திய மண்ணில் பெண் இரண்டறக் கலந்தவள் என்பதை எவருமே மறுக்க முடியாது. மனித இனத்தைக் கட்டிக்காக்கக் கூடிய சக்தி பெண்ணிடம்தான் இருக்கிறது. பெண்களை இறைவனின் சக்தியாகப் போற்றுகின்ற இந்தியாவில் பிறந்ததற்கு நாம் பெருமைப் பட வேண்டும்.

ஜெர்மனியில் எஹிரிங்ஸ்டோர்ப் என்ற இடத்தில் மிருகத்தனமான முறையில் ஒரு பெண் கொல்லப் பட்டிருந்தது தடையங்களால் கண்டு பிடிக்கப்பட்டது. அவள் “நியான்டர்தால்” இனப்பெண். அப்பெண் வாழ்ந்தது பன்னெடுங் காலத்திற்கு முன்னாள். அவள் ஒரு கல் கோடாரியால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருந்தாள். அவளுடைய தலை உடம்பிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது. மூளையைத் தனியாக எடுப்பதற்காக அவளுடைய மண்டையோட்டின் அடிப்பாகம் உடைத் துத் திறக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அக் காலத்தில் ஒரு பெண்ணின் தலை

தாழ்த்தப்பட்டது. இது மிகப் பழைய நிகழ்ச்சி.

கி.பி.19-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னான வரலாறுகளில் பெண் தலைநிமிர்ந்த நிகழ்வுகளைக் காணமுடிகிறது.

ஒரு நாட்டின் வீரத்தையும், முன்னேற்றத்தையும் அளப்பதற்குரிய மிகச்சிறந்த கருவி பெண். இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெறத்தகுதி பெற்ற முதல் இந்திய பெண்மணி ஜான்சிராணி. வெள்ளைய சிப்பாய் களுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய சிங்கம். ஆங்கிலேய போர் வீரர் பௌகரை எதிர்த்து வீர ரத்தத்தைச் சுமந்து போர்செய்தாள் ஜான்சிராணி சுயஉருவம் எடுக்க பௌகர் ஈடுகொடுக்க முடியாமல் வீழ்ந்தான்.


1835 – 1858

ஜான்சி ராணியின் வாள் வீச்சு பாயும் இடமெல்லாம் ஆங்கில படையின் இரத்தம் சிதறும். சுதந்திரத்திற்காக இந்தப் பூமி ஏற்ற முதல் பெண் உருவம் ஜான்சிராணி.

***கடல் அலைகளாலும்***
***தடுக்க முடியாக்***
***காற்று - பெண்***

கல்வியே தெய்வம் எனக் கூறப்படும் இக்காலத்தில் பெண்கல்வி எளிது.

முத்துலெட்சுமி ரெட்டி காலத்தில் பெண் கல்வி பாவமாகக் கருதப்பட்டது. பெற்றோர்க்குத் தெரியாமலே ஆங்கில கல்வியைக் கற்றார். அவரது கல்லூரிப் படிப்புக் காலகட்டத்தில் தேசிய தலைவர்கள் பாராட்டியுள்ளனர்.


1886-1968

சில ஆண்டுகள் கழித்து சென்னை யில் ஆய்வுமையத்தை நிறுவினார். அக்காலத்தில் சுய தொழில் தொடங்கிய முதல் பெண்மணி.

இந்திய மண்ணில் பிறக்கா விட்டாலும், இந்த மண்ணின் மைந்தர் களுக்குத் தம் இதய அன்பையும் இன்முக தொண்டையும் முழுவதுமாக


1910 – 1997

ஒப்படைத்தவர் அன்னை தெரசா. அணு ஆயுத அவலங்களும், இயற்கை தரும் எதிர்பாராத துயரங்களும் உலகெங்கிலும் பரந்து விரிந்துள்ள இந்த நேரத்தில் மனித குலத்துக்கு அமைதியைக் காக்க பணியாற்றிக் கொண்டிருக்கும் பணிப் பெண். பெண்ணினத்திற்கே பெருமை சேர்ப்பது அன்னைதெரசாதான். நோய் கண்டு வாடும் இயல்பும், பசிப்பிணி கண்டு உருகும் இதயம் கொண்டிருந்த தெரசா தன் கடமையைப் பதினைந்து ஆண்டுகளாகப் பள்ளியிலே செய்தார். பள்ளியில் 1944 இல் பள்ளிமுதல்வர் பதவி தேடி வந்தது. உடல் நலம் குன்றிய நிலையிலும் முதல்வர் பொறுப்பைத் திறம்பட செய்து வந்தார். இவர் கல்கத்தா காளிகோயில் அருகே 1952 நிர்மல் இருதயம் என்ற பெயரில் இறப்போர் நல இல்லம் துவங்கினார்.

உலகம் முழுவதும் புகழ்பெற்ற இவர் “வெணிசுலா” நகரில் 1965 ஆம் ஆண்டு மடம் ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து கொலம்பியா, பொலிவியா, பிரேசில் போன்ற இடங்களில் சேவை செய்து ‘அன்னை’ பெயர் பெற்று “அன்னை தெரசா” ஆனார்.

பருவங்கள் தோறும் பொழிகின்ற மழையைப்போல இல்லாது, காலமும் இடமும் கருதாதது அன்பு. அந்த அன்புமழையைப் பெண் பொழிகிறாள். அம்மழையால் உலக உயிர்களின் இதயங்கள் நனைந்து குளிர்கின்றன.

◙

## விதைகளும் விருட்சங்களும்

### கவிஞர் எழிலரசியின் கவிதைகள் பற்றிய கட்டுரை

மனித மனங்களின் கனங்கள் தன் கவிதைச் சிறகசைப்பில் மென்மையாகச் சொல்லிச் செல்பவர் கவிஞர் எழிலரசி. மிகையான அலங்காரங்களைப் பயன் படுத்தாது மிக எளிய படிமங்களால், அழகான கவிதைகளை வடிப்பதில் ஆர்வம் கொண்ட இவரது முதல் கவிதைத் தொகுப்பு ‘மிதக்கும் மகரந்தம்’ என்பதாகும்.

இவர் வேலூர் மாவட்டம், ராணிப் பேட்டையில் பிறந்தவர். தமிழ் இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர் தொடக்ககாலத் தமிழ்ப் புதினங்களில் பெண் சித்திரிப்பு பற்றிப் பெரும் ஆய்வினை மேற்கொண்டவர். தற்போது நாமக்கல் அறிஞர் அண்ணா அரசுக் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்.

இன்றைய சமுதாயத்தில் பெண் சமுதாயம் உயர்வானதொரு நிலைக்கு வந்த போதிலும் தரணியை ஆளும் திறமை கொண்டிருந்த போதிலும் அவளைப் பொறுத்த வரை அம்மா வீடு என்பது அவருக்கு நிரந்தரமல்ல என்பதை அழகுற கூறிச் செல்லும் எழிலரசியின் கவிதைத் துளி ….. நம் முன்னே காட்சியாய் விரிகிறது.

*“இருந்து*
*விட்டுச் சென்ற வீடு*
*மறுபடியும் வாய்ப்பதில்லை*
*நெருடல்களும் புழுக்கங்களுமாய்ப்*
*பிதுக்கம் கொண்டதன் பிறகு*

*ஒரு போதும் என்னை அது*
*ஏற்றுக் கொள்வதில்லை*
*அவ்வப்போது மையம் கொண்ட*
*தென்றல் திட்டுக்கள்*
*எண்ணங்களில் மேலோங்கும்*
*அன்று*
*படிப்பதற்கென*
*விடுதிக்குச் சென்றதன் பிறகு*
*விடுமுறைக் கால ஓய்விடமாயிற்று*
*மணமான பின்*
*எம் அம்மாவீடாயிற்று*
***என் வீடு" (அம்மா வீடு –ப.எண்.19)***

பாரதி விரும்பிய வண்ணம், நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையுமாய் விளங்க வேண்டிய புதுமைப் பெண்ணானவள் சமுதாயத்தில் உலவி வரும் இராவணர்களால் தன்நிலை மாறிப் போனதைக் கூறிச்செல்லும் கவிஞரின் கவிதைத் துளிகள், கண்ணீர்த் துளிகளாய் தடம் மாறிப் போகின்றன.

*"தடுமாறுகிறது நா*
*கூசிப் போகிறது மனம்*
*அளவிடும் அச்சுறுத்தும்*
*அலட்சியப்படுத்தும்*
*எல்லாப் பார்வைகளையும் தவிர்க்கக்*
*கால் பெருவிரலைப் பார்த்தே*
*என்ன நிமிர்த்தியும்*
*வளைந்தே போனது முதுகு*
*சுருங்கிப் போனது உலகம்"*
***(பெருவிரல் உலகம்-ப.எண்.49)***

இந்த உலகில் ஆறறிவு படைத்த மனித ஜீவராசிகள் தர இயலாத ஆறுதலை ஐந்தறிவு படைத்தப் பறவையினங்கள் தரத் தவறுவதில்லை. கவிஞரின் இக் கவிதை யினை வாசியுங்கள். அதில் நம் சுவாசம் சற்றேனும் நிம்மதியுறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

*"வந்தமரும் வாலாட்டும் தலை திருப்பும்*
*குதிக்கும் திரும்பும் கழுத்தை*
*வளைக்கும்*
*சற்றே பறக்கும் இணையுடன் பேசும்*
*மனத்தின் கனம் அனைத்தும்*
*அதன் சிறகசைப்பில்*
***லேசாய்" (சிட்டுச்சிறகு-ப.எண்-61)***

நிலையாமையை உணர்த்தும் நூல்கள் தமிழ் மொழியில் சமுத்திரம் போன்று விரிந்திருந்தாலும் எட்டே வரிகளில் அக்கருத்தைத் திறம்பட கூறிடும் கவிஞரின் சொல்லம்புகள் இதோ நம் கண்முன்னே பாய்வதைக் காணுங்கள்.

*"இயற்கைச் சீற்றத்தில் மூச்சடக்கி*
*நிலத்திற்கு உரம் சேர்க்கப் போனோம்*
*பிரளயம் முடியப்*
*பேரமைதி கொண்டோம்*
*நிலம் நடுங்கி நீர் பெருக*
*மூச்சற்று நெஞ்சடைக்க*
*நிலம் நடுங்கி நீர் பெருக*
*மூச்சற்று நெஞ்சடைக்க*
*கனக்கிறது வயிறு*
*கவிந்திருக்கிறது ஆகாயம்"*
***(கரை காணும் வாழ்க்கை-ப.எண்-30)***

இவ்வாறு எளிய படிமங்களால் நீரோடை போன்ற அமைதியான தம் கவிதை வரிகளில் எழிலரசி வடித்துள்ளார்.


**- விடியல் குழுவினர்**

க ட் டு ரை

# ❊ நீர் மாசுபாடு ❊

**த. தீபா**
இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு

நாம் உயிருடன் வாழ்வதற்கு, காற்றிற்கு அடுத்த நிலையில் 'நீர்' மிகவும் அவசியமான ஒன்று ஆகும். நம்முடைய அன்றாட தேவைகளை நிறைவு செய்வதில் ஆறு, குளம், ஏரி ஆகியவை முக்கியப் பங்கு வகிக்கின்றன.




நீர் பெருமளவு வேளாண்மைக்கும் தொழிற்சாலைகளுக்கும் பயன்படுகிறது. இருப்பினும், நீரானது மனிதர்களால், அவர்களின் செயல்களால் மாசடைகிறது.

இன்றைய உலக மக்களின் ஒரு பகுதியினர் தூய்மையான குடிநீரைப் பெற முடியவில்லை. நீரின் தரம் என்பது அதைப் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்தே உள்ளது. ஆற்றுநீரை மாசு படுத்துவதில் தொழிற்சாலைக் கழிவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.
பெரும்பாலும் தொழிற்சாலைகள் ஆறு கள் இருக்கும் இடங்களிலே கட்டப் படுகின்றன. அதற்கு முக்கியக் காரணம் தொழிற்சாலையின் அதிகப்படியான நீர்த்தேவையே ஆகும். உதாரணமாக சர்க்கரை ஆலை, எண்ணெய் தொழிற்சாலைகளுக்கு முக்கியமாக நீர் தேவை. இதனுடைய கழிவுகளை வெளியேற்றுவதற்குச் சரியான இடமாக நதி அமைவதால் நதிநீர் எளிதாக மாசடைகிறது. ஆற்றுநீரை அருந்தும் மக்களுக்கு எலும்பும் இதயமும் பாதிப்படைகின்றன.

நகரங்கள் மற்றும் பெருநகரங்களில் மனிதர்கள் வாழிடங்களில் இருந்து வெளிவரும் கழிவு நீர் நேரடியாகவே ஆற்று நீரில் கலந்து விடுவதால் ஆற்று நீர் மட்டும் கெடுவதுடன் அதிக அளவு நோய்களை ஏற்படுத்துகிறது. மேலும் நகரங்களில் கழிவுப் பொருள்களைச் சாலை ஓரமாகக் குவிப்பதால், இக்கழிவுப் பொருட்களில் இருந்து வரும் பாக்டீரியாக்கள் மழை நீருடன் கலந்து ஆறுகளில் மாசினை அதிகப் படுத்துகின்றன. ஆற்று நீரை மாசுபடுத்துவதில் தொழிற்சாலைகளை விட நகரங்களே விஞ்சி நிற்கின்றன.

பயிர்களுக்கும், மனிதர்களுக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சி இனங்களை அழிப்பதற்காகப் பூச்சிக் கொல்லி மருந்துகள் அதிக அளவில் பயன் படுத்தப்படுகின்றன. இந்தப் பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயிரிடும் நிலங்களில் கலந்து கழிவாக வெளியேறி ஆற்று நீரில் கலப்பதால், அங்கு வாழும் நீர்வாழ் உயிரினங்களின் திசுக்களில் நச்சுத் தன்மை ஏற்படுகிறது.

அந்த மீன்களை உணவாக உட்கொள்ளும் மனிதர்களுக்குப் பல தீங்குகள் ஏற்படு கின்றன. இதனால் பலவகைப்பட்ட மீனினங்களும் அழிந்து வருகின்றன.

நீர் மாசுபாட்டால் விளைச்சல் பாதிக் கப்படுகிறது. உற்பத்தியும் குறைகிறது. நச்சுத் தன்மை உள்ள மாசுப் பொருளாகிய காப்பர் சல்பேட் நீர்வாழ் உயிரினங்களைப் பாதிப்படையச் செய்து, உயிர் சேதம் விளைவிக்கிறது. குடிநீர் மாசுபாடு அடைவதால் நோய் உண்டாக்கும் கிருமிகள் நீரில் பல்கிப் பெருகுகின்றன. இப்படி மாசு அடைந்த நீரைக் குடிப்பதால் மஞ்சள் காமாலை, மலேரியா, காலரா, டைபாய்டு போன்ற பரவும் நோய்களும் ஏற்படுகின்றன.

திருப்பூர் மற்றும் கரூர் நகரங்களில் உள்ள சாயத் தொழிற்சாலைகளிலிருந்து ஏராளமான கழிவுப் பொருட்கள் நதி நீரில் கலக்கின்றன. அன்றாடம் மனிதர் மற்றும் கால்நடைகளால் குளம், ஏரிகள் பெரிதும் மாசுபடுகின்றன. இதைப்போலவே நகரங் களில் இருந்து வெளிவரும் சாக்கடைக் கழிவுப் பொருள்களாலும் நதிநீர் மாச டைகிறது.

### *தடுப்பு நடவடிக்கைகள்:*

காவிரி போன்ற நதிநீர்களில் ஏற்பட்டுள்ள மாசுபாட்டைத் தடுக்க மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும்.

உலகம் முழுவதிலும் 70 சதவீதம் நீர் விவசாயத்திற்காகவும், 20 சதவீதம் நீர் தொழிற்சாலைப் பணிகளுக்காகவும், 10 சதவீத நீர் மனித நுகர்வு களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

இதனால் அந்தந்தப் பொருளா தாரத்திற்குத் தகுந்தபடி நீரைப் பயன்படுத்த வேண்டும்.

பல நாடுகளில் அரசு நீர் மாசுபாட்டைத் தடுக்க பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. இதன் விளைவாக நிலமட்ட நீர், நிலத்தடி நீர், மழை நீர் ஆகியவற்றை விஞ்ஞான முறையில் பயன்படுத்துவது போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நீர்ப்பாசன வசதிகளை மேம் படுத்துவது, கால்வாய் முறையை ஒழுங்குபடுத்தி நீர் வீணாவதைத் தடுப்பது, சொட்டு நீர் பாசன முறையை அறிமுகப்படுத்துதல் போன்ற திட்டங் களால் நீரைப் பாதுகாத்து நன் முறையில் பயன்படுத்த முடியும்.

ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் மழைநீர் சேகரிப்பு தொட்டி வைக்க வேண்டும். நம் முதல் உணவே நீர் தான், அதனால் அந்த நீரைச் சுத்தமான பாத்திரத்தில் பயன்படுத்த வேண்டும். மாதம் ஒரு முறையாவது நாம் சுற்றி இருக்கும் நிலப்பரப்பைத் துப்புரவு செய்ய வேண்டும். இந்தச் செயலை நாம் தொடர்ந்து செய்து வந்தால், நம்மைச் சுற்றி நன்னீரே சூழ்ந்திருக்கும்.

தமிழறிஞர் அறிமுகம்


# கவிமணி

**முனைவர் மா. கார்த்திகேயன்**

தமிழ்த்துறைத்தலைவர்

**"துரும்பென மெலிந்த தேகம் துலங்கிடும் குளிர்ந்த பார்வை**
**இரும்பினும் வலிய உள்ளம் இனியவே செய்யும் எண்ணம்**
**கரும்பினும் இனிய சொற்கள்"**

– என்று நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளையால் புகழப்பட்ட கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்குக் ஜூலை மாதம் 27-ஆம் தேதியோடு 134 வயது நிறைவடைகிறது.



கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் 1876 ஆம் ஆண்டு ஜூலை 27-ஆம் தேதி கவிமணி பிறந்தார்.

தமது 9 வயதில் தந்தையை இழந்தவர். தாய் ஆதிலட்சுமி அவர்களால் வளர்க்கப் பெற்றார். 19-ஆம் வயதில் அழகம்மை விருத்தம் பாடினார்.

இனிய தமிழில் எவரும் விளங்கப் பாடல் இயற்றும் திறம் பெற்றவர்; குழந்தைகளுக்கேற்றத் தமிழ்ப் பாக்கள் இயற்றும் திறமிக்கவர்.

***"தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே***
***துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி –***

என்று குழந்தைகளுக்காகப் பாடல்களை இயற்றியுள்ளார். இவர்தம் கவிதைகள் குறித்து ரசிகமணி டி.கே.சி,

**"தேசிய விநாயகத்தின் கவிப்பெருமை**
**தினமும் கேட்பது என் செவிப்பெருமை"**

எனப் புகழ்ந்துரைத்துள்ளார்.

கவிமணி தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி களையும் கற்றறிந்தவர். தமிழ்மொழிக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர், சிறந்த சொற்பொழிவாளர், நகைச்சுவைப் பேச்சாளர் - எனப் பல முகங்களுக்கு உரிமையுடையவர்.

குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைய பாடுபட்டவர்களில் கவி மணியின் பங்கு மகத்தானது. பட்டம், பதவிகள் தேடி வந்தபோதும் அதனை விரும்பாமல் புன்னகையுடன் ஒதுக்கித் தள்ளியவர்.

தமிழகம் சென்னை மாகாணமாக இருந்தபோது கவிமணியை அரசவைப் புலவராக ஆக்கவேண்டும் என்று மாகாண முதல்வராக விளங்கிய ராஜாஜி எண்ணினார். நாஞ்சில் நாட்டுப் பகுதிகள் அப்போது திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழ் வந்ததால் அவ்வாறு கவிமணியை அரசவைப் புலவராக்குவதில் சிக்கல் இருந்தது. அதற்காகச் சென்னை மாகாணத்தின் கீழ் இருந்த நெல்லை மாவட்ட எல்லைப் பகுதியான காவல் கிணறு அருகே 5 சென்ட் நிலம் கவிமணியின் பெயருக்கு வாங்கி வரி முதலியவற்றைக் கவிமணி பெயரில் அளித்தால் போதும். அவர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்தான் என்று கருதி அரசவை கவிஞராகச் சிறப்பிக்கலாம் என்று எழுத்தாளர்

கல்கியும் கவிமணிக்குக் கடிதம் எழுதினார்.

ஆனால், கவிமணி இதனை ஒப்புக் கொள்ளவில்லை. நிலம் வாங்குவதற்கான வசதி, வாய்ப்புகள் உள்ளன. ஆனால் பட்டம், பதவிக்கு நான் தகுதியுடையவன் அல்ல என்று மறுத்துவிட்டார். அதோடு அப்பதவிக்கு நாமக்கல் வெ.இராமலிங்கம் பெயரை முன்மொழிந்தார்.

ராஜா சர் முத்தையா செட்டியர் கவிமணியை அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் சிறப்புநிலைப் பேராசிரியராக இருக்க கேட்டுக் கொண்டார். வருடத்திற்கு இரண்டு, மூன்று சொற் பொழிவுகள், இலவச வீடு, மாதம் 600 சம்பளம் என்று கூறினார் முத்தையா செட்டியர். ஆனால் கவிமணி அவர்கள் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

கல்கி எழுதி, சிவாஜிகணேசன் நடித்து வெளிவந்த "கள்வனின் காதலி" திரைப்படத்தில் கவிமணி எழுதிய,

**"வெயிற் கேற்ற நிழலுண்டு**
**வீசும் தென்றல் காற்றுண்டு**
**கையிற் கம்பன் கவியுண்டு**
**கலசம் நிறைய மதுவுண்டு"......**

என்ற பாடல் இடம்பெற்றுள்ளது. இதை அறிந்த கல்கி கவிமணியிடம் ஒரு பெருந்தொகையைக் கொடுத்துவரும்படி சிவாஜிகணேசனை அனுப்பினார். அவரும் சென்றார். கொடுத்தார். ஆனால் கவிமணி அத்தொகையைப் பெற்றுக் கொள்ள வில்லை. திரும்பி கல்கி இடமே கொடுக்கும்படிக் கூறினார். இந்நிகழ்வை நினைத்து நெகிழ்ந்த சிவாஜி கணேசன் கவிமணியைத் "தமிழ்ப் பெரியார் கவிமணி" என்று புகழ்ந்தார்.

**"மங்கையராகப் பிறப்பதற்கே**
**நல்ல மாதவம் செய்திடல்**
**வேண்டுமம்மா....."**

என்று பெண்ணினம் சார்ந்து பாடிய கவிமணியைச் செம்மொழியாம் தமிழ் மொழியைப் போற்றும் இந்நாளில் நினைவு கூர்வோமாக.

## பால் - சில குறிப்புகள்

**பி. சந்துரு**
இளங்கலை கணிதம் (கணினி)
இரண்டாமாண்டு

- உலகில் பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு - இந்தியா.
- ஒட்டகத்தின் பால் கறந்தவுடன் கட்டியாகி விடும்.
- சிங்கத்தின் பாலை, தங்கக் கிண்ணத்தைத் தவிர வேறு எந்த பாத்திரத்தில் வைத்தாலும் கெட்டுப் போய்விடும்.
- பசும்பாலை விட, ஒட்டக பாலில் அதிக சத்துக்கள் உள்ளன.
- பாலைத் தயிராக்க உதவும் பாக் டீரியாவின் பெயர் பேசில்லஸ்.
- பாலின் சுத்தத் தன்மையை அறிய உதவும் கருவி – லேக்டோ மீட்டர்.
- யாக் எருமையின் பால் ஊதா நிறத்தில் இருக்கும்.

**நாட்டுப்புறவியல்**
**தேசியக் கருத்தரங்கம்**



தமிழ்த்துறையின் சார்பாக நாட்டுப்புற மண்ணும் மரபும் மக்களும் என்னும் தலைப்பில் நாட்டுப்புறவியல் தேசியக் கருத்தரங்கு 09-04-10 (ஞாயிற்றுக் கிழமை) அன்று கல்லூரிக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

கல்லூரியின் தாளாளர் டாக்டர் கே.எஸ்.ரங்கசாமிMJF ஐயா அவர்கள் குத்துவிளக்கு ஏற்றித் துவக்கி வைத்து தலைமை வகித்தார்.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா.கார்த்திகேயன் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் நா.கண்ணன் வாழ்த்துரை வழங்கினார். கே.எஸ்.ஆர். தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் தியாகராஜன் முன்னிலை வகித்தார்.

நாமக்கல் அறிஞர் அண்ணா கல்லூயின் தமிழ்த்துறை இணைப்பேராசிரியரும் எழுத்தாளருமான முனைவர் பெருமாள் முருகன் அவர்கள் கருத்தரங்கிற்குச் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

கல்லூரியின் தாளாளர் அவர்கள் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூலை வெளியிட, அதைச் சிறப்பு விருந்தினர் பெற்றுக் கொண்டு சிறப்புரை வழங்கினார்.

இக்கருத்தரங்கில் பல்வேறு பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பேராசிரியர்களும் ஆய்வு மாணவர்களும் தத்தமது ஆய்வுக் கட்டுரைகளை வாசித்து விவாதித்தனர்.

தமிழ் முதுநிலை விரிவுரையாளர் முனைவர் பெ. கணேசமுருகன் நன்றி கூறினார்.

# சார்லஸ் டிக்கின்ஸ்

**சி. சரவணராஜா**

**இளங்கலை ஆங்கிலம் இரண்டாமாண்டு**

டிக்கின்ஸின் முழுப்பெயர் Charles John Huffan Dickens என்பதாகும். இவர் ஆங்கில இலக்கியத்தில் தனிச் சிறப்புமிக்கவர். இவர் சிறந்த நாவலாசிரியர் மற்றும் ஓவியர். பிறப்பு : 7 பிப்ரவரி 1812. பிறந்த இடம் Lardport, Portsmouth. தந்தை: John Dickens. தாய் : Elizabeth Barrow. இறப்பு: 9 சூன் 1870 மறைந்த இடம் God's Hill Place, Higham, Kent.



இவரது தந்தை ஓர் அலுவலகத்தில் குமாஸ்தாவாகப் பணியாற்றியவர். சார்லஸ் இரண்டு வயதாக இருந்தபோது இவரது குடும்பம் லண்டன் சென்று வாழ்ந்தது. இவருடைய தந்தை அதிகமாகக் கடன் வாங்கியதால் அதை அடைக்க முடியாமல் போனது. அதனால் இவருடைய தந்தை சிறைதண்டனை அனுபவிக்க நேர்ந்தது. குடும்பத்தை எடுத்து நடத்த வேண்டிய நிலமைக்குச் சார்லஸ் தள்ளப்பட்டார். அப்போது அவருக்கு வயது 11. சிறுவனாக இருந்ததால் அவர் மிகவும் வருந்த நேர்ந்தது. பின்னர் அவர் பள்ளிக்குச் சென்று படித்து முடித்தார்.

தனது பதினைந்தாவது வயதில் ஒரு வழக்கறிஞரிடம் துணையாளராகச் சேர்ந்தார். சார்லஸ் தனது 21 ஆவது


வயதிலிருந்து நாவல் எழுதத் தொடங்கினார். சார்லஸ் இன் முதல் நாவல் 'The Pickwick Papers'. இதன் வழியாகப் புகழ் பெற்றார்.

இந்த முதல் நாவல் நகைச்சுவை உணர்வுமிக்கது. சார்லஸ் ஒரு மிகப்பெரிய ஓவியர். லண்டன் வாழ்க்கையில் எந்த ஓர் இடத்தைப் பார்த்தாலும் அதை அப்படியே வரைந்து காட்டுவார். இவர் மனிதநேயம் மிக்கவர். ஏழை மக்களிடையே மிகவும் மனிதநேயம் காட்டுவார். இவரது பிற நாவல்கள்: 1.The Old Curiosity, 2.Nicholas Nickleby, 3.Oliver Twist, 4.A Tale of Two cities, 5.David copperfield , 6.Great Expectations, 7.Bleak House, 8.Our Mutual Friend, 9.Hard Times , 10.Little Dorrit.

# ❋நேருவின் மேசையில்❋

**முனைவர் த. கண்ணன்**
தமிழ் விரிவுரையாளர்

காந்தியக் கொள்கையால் பட்டை தீட்டப்பட்ட வைரம் ஜவஹர்லால் நேரு ஆவார்.



அயரா உழைப்பின் அடையாளமாகத் திகழ்ந்தவர். ஓய்வென்பது அறியாது உழைத்தவர்.

தனது உழைப்பை மேலும் உயர்த்த வேண்டும் எனும் எண்ணத்தில் ராபர்ட் ஃபிராஸ்ட் எழுதிய கவி வரிகளில் நான்கு வரிகளை மொழிபெயர்த்து தன்னுடைய மேசையில்,

***"வனப்புமிக்க சோலைதான்***
***வளமிக்க சோலைதான் - ஆனால்***
***எனக்கு உற்ற கடமைகள்***
***எவ்வளவோ இருப்பதால்***
***காதம்பலவுங் கடந்துதான்***
***கண்ணயர முடியும் நான்***
***காதம்பலவுங் கடந்துதான்***
***கண்ணயர முடியும் நான்"***

என எழுதிவைத்திருந்தார்.

இவ்வரிகள் ஒரு பயணியின் கூற்றாக உள்ளது. கடமையை நோக்கிச் செல்லும் ஒரு பயணியின் இலட்சிய கூற்றாக உள்ளது.

கடமை மேற்கொண்டு போகும் பயணத்தில் அக்கடமையை முடிக்கும் வரையில் ஓய்வு, உறக்கம் கொள்ளுதல் கூடாது. அழகும் வளமும் நிறைந்த ஒரு சோலையாக இருந்த போதும் அங்கேயே கடமையை மறந்து ஓய்வு கொள்ளக் கூடாது. முதலில் கடமையை நிறைவேற்ற வேண்டும். கடமைப் பயணத்தின் தூரங்கள் எவ்வளவாக இருந்தாலும் அதனைச் சென்றடைந்த பின்பே ஓய்வு. அதுவரை அயராது உழைக்க வேண்டும் என்ற கருத்தினை உள்ளடக்கிய வரிகளாக இவை உள்ளன.

எனவே, இவ்வரிகளை நம் உள்ளத்துள் எழுதி, நம்நாடு நன்னாடாக உயரும் வரை உழைப்போம்.

## ❋ ‘வணக்கம்’-பொருள் ❋

**ரா. அருணா**
இளங்கலை கணிதம் (கணினி)
இரண்டாமாண்டு



வணங்கிய வில்லில் பூட்டிய அம்பு தூரத்திற்குச் செல்வதைப் போல வணங்குபவன் வாழ்வு உயர்வுக்குச் செல்லும். “வணக்கம் தனக்கு அழகு” நமது பாரத பண்பாட்டின்படி இரு கைகளைக் கூப்பி முதியோரையும் மதிப்பிற்குரிய பெரியோர்களையும் வணங்குவது மரபு.

ஒருவரை ஒருநாளின் துவக்கத்திலும், பல நாட்களுக்குப் பின் காணும் போதும் வணக்கம் கூறி வாழ்த்தி வரவேற்பது வழக்கம்.

இதயத்திலிருந்து உண்மையான அன்போடு வணங்க வேண்டும் என்பதற்காகத்தான் மார்புப் பகுதியில் இரு கை கூப்பி வணங்குகிறோம்.

“நமஸ்தே” என்ற ஹிந்திச் சொல்லுக்கு ‘என்னுடையதாகக் காணும் இவ்வுடல் என் சுயலாபத்துக்கானது அல்ல’ என்றும் ‘உங்கள் சேவைக்கே’ என்றும் பொருள்.

தன்னைவிடத் தம்முன் நிற்கும் நபருக்கே உயர்வளிக்கும் பண்பே’ வணக்கத்திற்கான பண்பாட்டு வரையறையாகும். தலை தாழ்த்திக் கரம் கூப்பி வணங்குதல் என்பது “நான் என்றும் பணிவானவன்” என்பதைக் கூறும் செயலாகும்.


## ❋ எளிய மருத்துவம் ❋

**வெ. ஜெய பாலாஜி**
இளங்கலை கணிதம் (கணினி)
இரண்டாமாண்டு

**தோல்வலி நீங்க** – மாதுளம், அன்னாச்சி, திராட்சை, எலுமிச்சை சாப்பிடலாம்.

**இதயநோய் நீங்க** – மருதம்பட்டைப் செம்பருத்தி பூ கஷாயம் 48 நாட்கள் சாப்பிடலாம்.

**ஆறாத புண்கள் ஆற்ற** – சாணாக்கீரை சாப்பிடலாம்.



**வாய்திக்குதல் குணமாக** – வில்வ இலையைத் தினமும் காலையில் சாப்பிடலாம்.

**இரத்தக்குழாய் அடைப்பு நீங்க** – தினமும் ஒரு கப் தயிர் சாப்பிட்டு வரலாம்.

**உடல் பலம் பெற** – தூதுவளை இலையை நெய்யில் வதக்கி, துவையலாகச் சாப்பிடலாம்.

**வாய்ப்புண் குணமாக** – தேங்காய்ப் பாலுடன் தேன் கலந்து பருகலாம்.

**தும்மல் நிற்க** – தூதுவளை இலையைப் பொடி செய்து சாப்பிடலாம்.

**அஜீரணம் சரியாக** – துளசிரசம் சாப்பிடலாம்.

# எனது கல்லூரி

**ஏ. அலாவுதீன்**

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

நான் முதல் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை அரசு பள்ளியிலே பயின்று வந்தேன். தொடர்ந்து நான் கல்லூரிக்கு வருவேன் என்று சற்றும் எதிர்பார்க்க வில்லை.

காரணம் என் குடும்பச்சூழல். அப் பொழுதும் நான் எனது அம்மாவிடம், "அம்மா நான் மிகச்சிறிய கல்லூரி யிலேயே சேர்ந்து கொள்கிறேன்" என்று கூறினேன். என் அம்மா அதை ஒப்புக்கொள்ளவில்லை. மற்ற மாணவர் களைப் போலவே என்னையும் பெரிய கல்லூரியில் படிக்க வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

பின்பு என் அம்மா கே.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேர்த்தார். அங்கு பணக்காரர்கள் எல்லாம் படிப்பார்கள் என்று கூறி நான் கல்லூரிக்குச் செல்ல மறுத்தேன்.

பின்பு ஒப்புக்கொண்டு சென்றேன். முதல் நாள் அன்று கல்லூரியின் தாளாளர் கே.எஸ். ரங்கசாமி MJF அவர்கள் மேடையில் பேசினார்கள். அப்பேச்சில் இருந்த உள்ளார்ந்த செய்திகளின் வழியாக எனக்குத் தெம்பு கிடைத்தது.

பின்பு போகப் போக எனக்குப் பழகிவிட்டது. அன்பான கல்லூரி முதல்வர் எதைக் கேட்டாலும் செய்து தரக்கூடியவர். நான் சேர்ந்த துறை தமிழ்த்துறை ஆகும். முதல்வரே அன்பானவர் என்று கூறும் போது அவர்கள் கீழ் பணியாற்றும் ஆசிரியர்களைக் கூறவோ வேண்டும்?

இக்கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் திறமை வாய்ந்தவர்கள். நான் அரசுக் கல்லூரியில் சேர்ந்தி ருந்தால் இத்தகைய நிலையை அடைந்திருப்பேனா! என்று தெரிய வில்லை.

ஏனென்றால் எளிய குடும்பத்தில் பிறந்த நான் அதுவும் எனக்குத் தற்போது அப்பா இல்லை. அப்படிப்பட்ட நிலையில் நான் கல்லூரிக் கட்டணத்தை எப்படிச் செலுத்துவேன்.

அதற்காக நான் டியூசன் ஆரம்பித்தேன். பின்பு அதில் வரும் ரூ.2000த்தை வைத்துக் கொண்டு சமாளித்தேன். பின்பு எனது துறைத் தலைவர் முனைவர் கார்த்திகேயன் அவர்களால் நான் இத்தகைய நிலையை அடைந்தேன்.

என்னவென்றால் துறைத்தலைவர் அடிக்கடி கூறுவார். கல்லூரியில் ஒரு விழா என்றால் அப்படிச் செய்வேன். இப்படிச்செய்வேன்! மேலும் நடிகர்கள்

மற்றும் நடிகைகள் அழைத்து வந்ததை சொல்லுவார்.

அது என் மனதிற்குள் மொட்டிட்டு பூவாய் மலர்ந்தது. நானும் எனது டியூசனில் ஈரோடு மாநகர மேயர் திரு குமார்முருகேஷ் அவர்களை அழைத்து வந்து ஆண்டு விழா கொண்டாடினேன்.

இவ்வாறு பல்வேறு இடர்பாடுகளைக் கண்ட நான் இக்கல்லூரி மற்றும் ஆசிரியர்களால் இத்தகைய நிலையை அடைந்தேன்.

இப்பொழுது எனது டியூசனில் 80 பேர் படிக்கின்றனர். என்னுடைய மாதவருமாணம் ரூ.5000 ஆகும். இதற்குக் காரணம் இக்கல்லூரியே. இக்கல்லூரிக்கு நான் வரவில்லை என்றால் இத்தகைய நிலையை அடைந்திருப்பேனா என்று தெரியவில்லை.

இதற்கு முழுக்க காரணம் எனது கல்லூரி, கல்லூரிச் செயலர், கல்லூரிச் செயல் இயக்குநர், கல்லூரி முதல்வர் மற்றும் எனது ஆசிரியர் பெருமக்கள்.

இப்பெருமையெல்லாம் "நாங்களும் படிக்கலாம்" என்று கல்லூரியை நிறுவிய தாளாளர் கே.எஸ். ரங்கசாமி MJF ஐயா அவர்களையே போய்ச் சேரும்.

கல்விக்கு உதாரணம் இக்கல்லூரி! என்னுடைய இரண்டாண்டுக்கால கல்லூரி அனுபவத்தில் கூறுகிறேன். இக் கல்லூரியில் படிப்பதை நான் பெருமையாக நினைக்கிறேன்.

# கொண்டாடுவோம்

**ந. ஜெய்ஸ்ரீ**
இளங்கலை கணிதம் (கணினி)
இரண்டாமாண்டு

விழாக்கள் ஆண்டுதோறும் நம்மைப் புதுப்பித்துக் கொள்ள உதவுகின்றன. மனத்திற்குப் புத்துணர்ச்சி அளிக்கின்றன. புதிதாகப் பிறந்தது போன்ற உணர்வை அளிக்கின்றன. நாமும் கொண்டாடி மகிழ்வோம்.

முதல் ஆண்டு - காகித விழா
இரண்டாம் ஆண்டு - பருத்தி விழா
மூன்றாமாண்டு - தோல் விழா
நான்காம் ஆண்டு - பூ விழா
ஐந்தாம் ஆண்டு - மர விழா
ஆறாம் ஆண்டு - இரும்பு விழா
ஏழாம் ஆண்டு - செம்பு விழா
எட்டாம் ஆண்டு - வெண்கல விழா
ஒன்பதாமாண்டு - மண்கல விழா
பத்தாம் ஆண்டு - அலுமினிய விழா
11 ஆம் ஆண்டு - எ∴கு விழா
12 ஆம் ஆண்டு - லினன் விழா
13 ஆம் ஆண்டு - பின்னல் விழா
14 ஆம் ஆண்டு - தந்த விழா
15 ஆம் ஆண்டு - படிக விழா
20 ஆம் ஆண்டு - பீங்கான் விழா
25 ஆம் ஆண்டு - வெள்ளி விழா
30 ஆம் ஆண்டு - முத்து விழா
40 ஆம் ஆண்டு - மாணிக்க விழா
50 ஆம் ஆண்டு - பொன்விழா
60 ஆம் ஆண்டு - வைர விழா
75 ஆம் ஆண்டு - பவள விழா
100 ஆம் ஆண்டு - நூற்றாண்டு விழா.

தொடர் செய்யுள் : பகுதி - 02

## கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ்



## 2. செங்கீரைப் பருவம்

*செங்கீரைப் பருவம் பிள்ளைத் தமிழின் இரண்டாம் பருவம் ஆகும். கீர் என்பத்குச் "சொல்" என்றும் "ஒலிக்குறிப்பு" என்றும் பொருள் உண்டு. கே.எஸ்.ஆர். ஆகிய குழந்தையின் சிறப்புகளை எடுத்துரைக்கும் பருவம் இது. குழந்தையின் 5 ஆம் திங்களில் இ்ஃது நிகழும்.*

**"எத்தனை எத்தனை கல்லூரி**
**எத்தனை எத்தனை தொழிற்சாலை**
**எத்தனை எத்தனை மாணவர்கள்**
**எத்தனை எத்தனை ஆசான்கள்**
**அத்தனை அத்தனை பேர்கட்கும்**
**அனுதினம் வசதிகள் செய்துதந்து**
**அரும்பெரும் சேவைகள் செய்பவனே!**
**அன்பெனும் பொன்மழை பெய்பவனே!**
**முத்தனே! முதல்வனே! முன்னவனே!**
**முக்கனி சுவைபோல் இனிப்பவனே!**
**முருகனை செங்கோட் டிறையவனை**
**முழுமன தால்தினம் துதிப்பவனே!**
**சித்தனே சிந்தனை மிக்கவனே!**
**செகத்தினில் ஆடுக செங்கீரை!**
**சீரார் அரங்கப் பெயரோனே!**
**செல்வனே! ஆடுக செங்கீரை!**

**செல்விதையை ஊன்றியும்**
**நீரதனைப் பாய்ச்சியும்**
**நீண்டுவளர் களைபறித்தும்**
**நிகரிலா உழுதொழிலை**
**நின்னையீன் றவர்செய்ய**
**நீயதில் மாறுபட்டே**
**பல்தொழிலைச் செய்தவா!**
**பால்வணிகம் செய்தவா!**
**பாரில்ஆழ் துளைக்கிணற்றைப்**
**பண்புடன் அமைத்தவா!**
**பாசனம் செய்தவா!**
**பரிவுடன் ஆடை யாக்கும்**
**நல்தொழில் செய்தவா!**
**நாள்தோறும் செய்தவா!**
**நானிலம் போற்றும் செல்வா!**

**நாற்பதா யிரம்கண்கள்**
**நாளும்உனைத் தேடியே**
**நன்றியைச் சொல்லும் வகையில்**
**செல்வமிகு கல்விநகர்**
**செகம்மகிழச் செய்தவா!**
**செங்கீரை ஆடியருளே!**
**செங்கோட்டுப் பிள்ளையே!**
**அரங்கனெனும் பிள்ளையே!**
**செங்கீரை ஆடியருளே!"**

***திரு. மோ. ஆ. யுவராசா,***
தமிழ்ப்பேராசிரியர்,
கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி.